# தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை
மற்றும்
முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்
இணைந்து நடத்தும்

## இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம்

தொகுதி - II

**UGC sponsored two day National Seminar on**
**HUMAN RIGHTS IN TAMIL LITERATURE**



பதிப்பாசிரியர்
**முனைவர் க. முருகேசன்**

157. *Dr. T. Muraleeswari* 712
Atrocities of Bonded Labour System Portrayed in Mahasweta Devi's Select Short Stories

158. *கி. சுப்பிரமணியன்* 718
கோவூர் கிழார் பாடல்களில் மனித உரிமைக் குறிப்புகள்

159. *அ. ராஜி* 722
இலக்கியங்களில் மனித உரிமைகள்: ஒரு பருந்துப் பார்வை

160. *சு. மலர்விழி* 726
ஆண்டாள் பிரியதர்சினியின் கவிதைகளில் மனித உரிமைகள்: திருநங்கையரை முன்னிறுத்தி ஒரு தேடல்

161. *முனைவர் வெ. சுகந்தா* 731
தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

162. *முனைவர் பா.வேலம்மாள்* 734
தமிழ் இலக்கியங்களில் பெண்ணுரிமை சிந்தனைகள் (கவிதைகளை முன்வைத்து)

163. *முனைவர் மொ. இரவிக்குமார்* 739
தமிழ்க் கவிதைகளில் காணலாகும் மனித உரிமைகள்

164. *முனைவர் இரா. மணிமேகலை* 744
ஐவகை மன்றத்து அமைதி

165. *முனைவர் க. முருகேசன்* 749
வைரமுத்துவின் படைப்பில் மனித உரிமைப் பதிவுகள்

166. *ஆ. நித்யா* 756
சுஜாதாவின் மனித உரிமைப்பற்றிய சமூகப்பார்வை

167. *ம. விவேக் பிரபு* 760
வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்களின் உரிமைக் குரல்

168. *முனைவர் க. பழனிவேல்* 765
புரட்சிக்கவியில் மனித உரிமைச் சிந்தனைகள்

169. *இரா. அபிமன்யு* 769
மாத்திரை சிறுகதையில் பெண்ணுரிமை

170. *முனைவர் சு. சதீஷ்குமார்* 774
சூதுபோர்ச் சருக்கத்தில் மனிதஉரிமை மீறல்கள்

171. *ச. மல்லிகா* 779
பிரபஞ்சனின் சிறுகதைகளில் பெண்ணுரிமை

172. *மு. ஜெயலட்சுமி* 784
அகநானூறு காட்டும் பெண்ணுரிமை

173. *முனைவர் ந. இரஞ்சன்* 791
தமிழ் மண்ணின் உரிமை காப்போம்

174. *முனைவர் கு. முத்துக்குமார்* 795
இலக்கியப் படைப்பாளிக்கெதிரான உரிமை மீறல்

# 161. தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

**முனைவர் வெ. சுகந்தா**
*இணைப்பேராசிரியர் & முதன்மையர்*
*தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

ஆதிமுதல் இன்று வரை மனிதர்கள் பிறவியிலிருந்தே அவரவர் எண்ணம் போல் செயல்படத் தகுதியுடைவர்கள். எல்லோரும் எல்லா உரிமைகளும் பெற்றவர்கள், உரிமைகள் யாரால் யாருக்குத் தரப்பட்டவை? மனித குலத்திற்குப் படைப்பாளியால் தரப்பட்டவை. ஒருவரது உரிமைகளைப் பயன்படுத்தும் சுதந்திரத்தை எது வரையறை செய்யும்? ஒன்றே ஒன்றுதான். குடிமக்களது ஒட்டு மொத்தமான அக்கறை. அதாவது சமூகத்தின் அக்கறை. இந்தச் சிந்தனையை முன் நிறுத்தி தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைகள் எங்ஙனம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை கருதுகோளாக்குகிறது.

உரிமையும் சுதந்திரமும் சமூகம் காட்டும் அக்கறையின் பால்பட்டது. தனிமனிதனும் இதில் பங்கு வகிக்கிறான். சமூகம் வழங்கும் உரிமை ஆண் பெண் பாகுபாடின்றி அனைவருக்கும் சமமாக இருத்தல் வேண்டும். உறுதியான சமூகச் சூழல் இருக்கும் பொழுதுதான் உரிமையை அனுபவிக்கும் சுதந்திரம் கிட்டும். உலகம் எதிர் நிலைகளால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. ஆண்-பெண், நன்மை-தீமை, மேலோர்-கீழோர், பணக்காரர்-ஏழை, புரவலர்-இரவலர், முதலாளி-தொழிலாளி, கற்றோர்-கல்லாதவர் எனப் பல அடிப்படைகளில் இரண்டாகவும், அதன் விளைவான ஏற்றத் தாழ்வுகளும் உலக இயல்பு இந்த எதிர் நிலைகளால் ஒரு அதிகார வரிசை உருவாகிறது. அதிகார வரிசை உரிமைகள் மறக்கப்படுவதற்கான சூழலை உருவாக்குகின்றது. தங்களுக்கான உரிமை பற்றிய உணர்வு பிறக்காத வரையிலும் மக்களின் உரிமைகள் பற்றிய சிந்தனைகளுக்கு இடமில்லை. "ஒடுக்கப்படுகிறோம்" என்ற உணர்வு மேலெழும்போது உரிமைப்போராட்டம் தொடங்குகிறது.

தமிழிலக்கியப் பரப்பில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உரிமைகள் சார்ந்த நிகழ்வுகளைக் காணமுடியும். "வாழ்தல் வேண்டி" மதுரை வந்த கண்ணகி பாண்டியனால் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக எழுப்பிய உரிமைக் குரலை வழக்குரைக் காதையில் கேட்கிறோம். "மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் நல்குவதுதான் அறம்" என மணிமேகலை பாடும்போது மனிதனின் வாழ்க்கைக்குரிய அடிப்படை உரிமைகளை வழங்குவதே அறம் என்ற சீரிய கருத்து புலப்படுகிறது. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற அப்பரின் முழக்கத்தில் மதம் சார்ந்த தனிமனித உரிமை வலியுறுத்தப்படுவதைக் காணமுடிகிறது.